Bodhi International Journal of
Research in Humanities, Arts and Science

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

# நடப்பியலில் வண்ணம்

**ஜெ.ஜமுனாராணி**

*உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

Open Access

Manuscript ID:
BIJ-SPL4-Jan26-MD-128

Subject: Tamil

Received : 02.09.2025
Accepted : 22.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si4.26.Jan128

Copy Right:

This work is licensed under
a Creative Commons Attribution-
ShareAlike 4.0 International License.

**ஆய்வுச் சுருக்கம்**

*அகத்தியத்தின் வழித்தொல்காப்பியரால் உருவாக்கப்பட்டது தொல்காப்பியம். இ.்.து இலக்கண நூல்களுள் முதன்மை வாய்ந்தது. அதில் இடம்பெறும் இலக்கணச்சுவை சொல்லவொண்ணாத் தொன்மை வாய்ந்தது. அகத்தியரின் மாணாக்கர்களில் தலைசிறந்த மாணாக்கன் தொல்காப்பியர் ஆவார். காப்பியக் குடியில் பிறந்த இவரின் சிறந்தபடைப்பு தமிழின் சிறந்த இலக்கணநூலான தொல்காப்பியம் ஆகும். இதனை மூலநூலாகக் கொண்டு பின்னாளில் நன்னூல் போன்ற வழிநூல்கள் தோன்றியுள்ளன. அத்தகைய பெருமைவாய்ந்த அவ்விலக்கணச் சமுத்திரத்தில் மூழ்கி; வண்ணங்களைத் தேர்ந்தெடுத்து; அதனைச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான பிள்ளைத்தமிழில் நடப்பியல் அணுகுமுறையில் பொருத்திப் பார்க்கும் முறையே இவண் மேற்கொள்ளப்படுகிறது. தமிழியல்துறையில் காலந்தோறும் ஆய்வுகள் வளர்ந்துகொண்டேஉள்ளன. ஓர் இலக்கியவகையில் இலக்கணத்தைப் பொருத்திப் பார்க்கும் முறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது*

***திறவுச்சொற்கள்:*** *பிள்ளைத்தமிழ், தொல்காப்பியம், வண்ணங்கள், திரைப்படப்பாடல்கள்*

## முன்னுரை

பரபரப்பான இன்றைய நவீன தொழில்நுட்பம் மற்றும் விளம்பரயுகத்தில் செய்யுளைத் தொடர்ந்து கற்போரின் எண்ணிக்கை சற்றுக் குறைந்தே காணப்படுகிறது. எனினும் மக்களில் சிலரும் இலக்கியவாதிகள் பலருமாக வளர்ந்து வரும் இக்காலத்தில் வாசகர்கள் உட்பட அனைவரும் செய்யுளைச் சுவைப்பதில் ஆர்வம் காட்டத்தான் செய்கின்றனர்.

செய்யுளைக் கற்பது இன்பம் நுகர்வதற்கே என்பது அடிப்படையான உண்மை. அந்த இன்பத்தைச் சுவைஞர்களுக்கு வழங்கக் கவிஞர்கள் பல்வேறு உத்திகளைக் கையாள்கின்றனர். அவற்றுள் சில வருணனைகளாகவோ, உருக்காட்சிகளாகவோ, படிமங்களாகவோ, குறியீடுகளாகவோ, பண்களாகவோ அமைக்கப்படுகின்றன. கவிஞன் தான் கூற விரும்பும் கருத்தை வெளிப்படையாகக் கூறுவதைக் காட்டிலும் வண்ணங்கள் அமைத்து நயமாகக் கூறுவதன் மூலம் செய்யுளின் வனப்பு அதிகரிக்கிறது. நாயக்கர்காலச் சிற்றிலக்கியங்களில் நடப்பியல் அணுகு

முறையில் வண்ணங்களின் பதிவுகளை இங்கு ஆராய்வோம்.

**வண்ணம் - விளக்கம்**

வண்ணம் என்பதற்குச் சந்த வேறுபாடு என்று தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு உரை எழுதிய பேராசிரியர் விளக்கம் தருகிறார். வண்ணம் என்ற சொல் 'வர்ண்' என்ற பிராகிருத சொல்லிருந்தும் 'சந்தம்' என்ற சொல் வடமொழியிலிருந்தும் தோற்றம் பெற்றன.

வண்ணம் என்பதற்கு அழகு, சந்தம், துதி, வகை, செயல், பூசுதல், நிறம், இசைப்பாட்டு, வடிவு, விதம், ஒப்பனை, குணம் என்பனவற்றை தமிழ் இலக்கிய அகராதி பொருளாகத் தருகிறது.

வண்ணம் என்பது ஆங்கிலத்தில் 'Music' என்றழைக்கப்படுகிறது.

- "Music is a focus on the essentials!" Lifco dictionary
- Music is, The vocal of instrumental sounds combined in a pleasing way
- The written signs representing music

வண்ணம் என்பதற்கு இராகம், குணம், சந்தம், நிறம், வடிவு ஆகிய பொருள்களைத் தருகிறது தமிழ் ஆங்கில அகராதி.

**வண்ணத்தின் அடிப்படை**

எழுத்து, சொல், தொடை, ஓசை, நடை அல்லது வடிவம் ஆகிய ஐந்தினையும் அடிப்படையாகக் கொண்டே வண்ணங்கள் தோன்றுகின்றன.

**அறிஞர் கருத்துகள்**

தமிழில் வண்ணக் கோட்பாடு பற்றி வரலாற்று நோக்கிலும், திறனாய்வு நோக்கிலும் ஆராய்வதற்குத் தொல்காப்பியர் நல்லதோர் அடிப்படை இட்டார் எனலாம். இஃது உரையாசிரியர் இளம்பூரணர் கருத்தாகும்.

"பாவின் கண்ணே நிகழும் ஓசை விகற்பம்"

என்பது **நச்சினார்க்கினியர்** கருத்து.

"கேட்பார்க்குப் பயன் உண்டாகப் புலவனால் படைக்கப்படும் புதுமைப் பொருள் குறிப்பிடும் பொருளின் துறை ஒன்றனோடு ஒன்று பொருந்தி நிற்கும் வகையான ஓசை இன்பம் வண்ணம் எனப்படும்"

என்பது இரா.இளங்குமரன் கருத்து.

"ஒரே ஒலி அல்லது அதற்கு இனமான ஒலிகள் ஓர் அடியிலோ, பாடல் முழுவதுமோ பயின்று வருவதே வண்ணம் ஆகும்"

என்பது **இ.சுந்தர மூர்த்தி** கருத்து.

"ஓரடியின் ஒரு சீரின் ஓரசை என்ன எழுத்தாக வருகிறதோ அவ்வாறே அடுத்த அடியின் அதே சீரின் அவ்வசை அந்த எழுத்தாகவே வருவது வண்ணம் எனப்படும்"

என்பது **புலவர் குழந்தையின்** கருத்து.

வண்ணம் என்னும் சந்த வேறுபாட்டை ஆங்கிலத் திறனாய்வாளர் ஒருவர்

"The sound echoes the sense" என்று இயம்புகிறார்.

**வண்ணங்களின் வகைகள்**

தொல்காப்பியர் வண்ணங்களை மொத்தம் 20 என்கிறார்.

**"வண்ணந்தாமே நாலைந்தென்ப"16**

**தொல். (204)**

இதனை 5 வகையாகப் பாகுபடுத்தலாம்.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

எழுத்து வண்ணங்கள், சொல் வண்ணங்கள், ஓசை வண்ணங்கள்,தொடை வண்ணங்கள், நடை வண்ணங்கள்

**எழுத்து வண்ணங்கள்**

எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமையும் வண்ணங்கள் எழுத்து வண்ணங்கள் எனப்படும். இவை மொத்தம் ஏழு வண்ணங்கள் ஆகும்.

| வ.எண் | வண்ணங்கள் | அமைப்பு |
|---|---|---|
| 1. | வல்லிசை வண்ணம் | வல்லெழுத்து மிகுந்து வருதல் |
| 2. | மெல்லிசை வண்ணம் | மெல்லெழுத்து மிகுந்து வருதல் |
| 3. | இயைபு வண்ணம் | இடையெழுத்து மிகுந்து வருதல் |
| 4. | நெடுஞ்சீர் வண்ணம் | நெட்டெழுத்து மிகுந்து வருதல் |
| 5. | குறுஞ்சீர் வண்ணம் | குற்றெழுத்து மிகுந்து வருதல் |
| 6. | சித்திர வண்ணம் | நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் மிகுந்து வருதல் |
| 7. | நலிபு வண்ணம் | ஆய்த எழுத்து மிகுந்து வருதல் |

**சொல் வண்ணங்கள்**

சொல் அல்லது சீர் அடுக்கி வருதல் மற்றும் திரும்பத் திரும்ப வருதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும் வண்ணங்கள் சொல் வண்ணங்கள் எனப்படும். இவை மொத்தம் மூன்று வண்ணங்கள் ஆகும்.

| வ.எண் | வண்ணங்கள் | அமைப்பு |
|---|---|---|
| 1. | பாஅ வண்ணம் | சொற்சீர்களை உடையதாய் இலக்கண நூல்களில் பயின்று வருவது |
| 2. | எண்ணுதல் வண்ணம் | எண்ணுதல் போல சொல்லடுக்கி வருதல் |
| 3. | ஏந்தல் வண்ணம் | சிறப்பு கருதி வந்த சொல்லே திரும்பத் திரும்ப வருதல் |

**ஓசை வண்ணங்கள்**

அகவல்,துள்ளல்,தூங்கல் ஆகிய பாக்களின் ஓசை, சீர்களின் எண்ணிக்கை, பொருள் நயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட வண்ணங்கள் ஓசை வண்ணங்கள் எனப்படும். இவை மொத்தம் ஆறு வண்ணங்கள் ஆகும்.

| வ.எண் | வண்ணங்கள் | அமைப்பு |
|---|---|---|
| 1. | ஒழுகு வண்ணம் | அகவல் போல ஒழுகல் ஓசை உடையது |
| 2. | ஒரூஉ வண்ணம் | பொருள் தொடர்பாக வராமல் அற்று அற்று வருவது |
| 3. | அகைப்பு வண்ணம் | துள்ளல் ஓசை போல் இடையிட்டு வருவது |
| 4. | தூங்கல் வண்ணம் | தூங்கல் ஓசை கொண்டு வருவது |
| 5. | உருட்டு வண்ணம் | நாற்சீரடியில் உருட்டி ஒலித்து அராகம் தொடுத்தல் |
| 6. | முடுகு வண்ணம் | நாற்சீரின் மிக்க சீர்களைப் பெற்று அராகம் தொடுத்து வருவது |

**தொடை வண்ணங்கள்**

எதுகை, பொழிப்பு, அளபெடை போன்ற தொடைநயங்களின் அடிப்படையில் அமையும்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

வண்ணங்கள் தொடை நயங்கள் எனப்படும். இவை மொத்தம் இரண்டு ஆகும்.

| வ.எண் | வண்ணங்கள் | அமைப்பு |
|---|---|---|
| 1. | தாஅவண்ணம் | இடையிட்டு வரும் எதுகைகளைக் கொண்டது |
| 2. | அளபெடை வண்ணம் | அளபெடை மிகுந்து வருதல் |

**நடை வண்ணங்கள்**

வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு அமையும் வண்ணங்கள் நடை வண்ணங்கள் எனப்படும். இவை மொத்தம் இரண்டு வண்ணங்கள் ஆகும். இவை வடிவ வண்ணங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

| வ.எண் | வண்ணங்கள்; | அமைப்பு |
|---|---|---|
| 1. | அகப்பாட்டு வண்ணம் | இறுதியடி இடையடி போல் நிற்பது |
| 2. | புறப்பாட்டு வண்ணம் | முடிந்தது போல இருப்பினும் முடியாததாகி வருவது |

**வண்ணம் தோன்றிய சூழல்**

சங்ககாலத்தில் கடவுளரைப் பற்றியும் புலவர்கள் தங்கள் வறுமையைப் போக்க மன்னர்களைப் புகழ்ந்து பாடவும் தம்திறமையைப் பிறருக்கு வெளிப்படுத்தும் பொருட்டும் தம் கருத்துகளை வலியுறுத்தும் பொருட்டும் தாம் இயற்றும் பாடல்கள் பிறரின் செவிக்கு இனிமை பயத்தலாலும் வண்ணங்களின் தேவையைப் புலவர்கள் அறிந்து கொண்டு பாடல்கள் இயற்றினர். எனவே பழங்காலத்திலேயே வண்ணத்தின் தேவையைக் கவிஞர்கள் உணர்ந்திருந்தனர்.

**வண்ணங்களின் வரலாறு**

சங்ககாலம் முதல் தற்காலம் வரை வண்ணங்கள் படிப்படியாய் வளர்ச்சியடைந்து வந்துள்ளன என்பதை அவ்வவ்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் வழி அறியலாம்.

**சங்ககாலம்**

சங்ககால இலக்கியங்களில் ஓசை அடிப்படையிலான அகவல் ஓசை தரும்; ஒழுகு வண்ணத்தில் அமைந்த பாடல்கள் அதிகமாக அமைந்துள்ளன எனலாம்.

**“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே – சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே”**

**குறுந்.(4)**

என்ற பாடல், ஆசிரியப்பாவில் அமைந்த அகவல் ஓசை கொண்ட ஒழுகு வண்ணத்திற்கு மிகச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

**“முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்”**

**64பட்டினப். (21)**

இப்பாடலில் வல்லெழுத்துக்கள் மிகுந்து வல்லிசை வண்ணம் பயின்று வந்துள்ளது.

**“யானே ஈண்டை யேனே என்நலனே**
**யானா நோயொடு கான ல..;தே”**

**குறுந். (97)**

இப்பாடலில் பொருள் தொடர்பின்றி அற்று அற்று வருவதன் காரணமாக ஒரூஉ வண்ணம் அமையப் பெற்றுள்ளது எனலாம்.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**“பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை**
**மலை யுளே பிறப்பினும்**
**மலைக் கவைதாம் என்செய்யும் நினையுங்கால்**
**நும்மகள் நுமக்கும் ஆங்கு அணையளே”**

**பாலைக்கலி (18)**

இப்பாடலில் துள்ளல் ஓசை இடையிட்டு வருவதால் ஓசை அடிப்படையிலான அகைப்பு வண்ணம் அமைந்துள்ளது எனலாம். தலைவனுடன் உடன்போக்கு சென்ற தலைவியைத் தேடி அலையும் செவிலிக்குக் கண்டோர் கூற்று நிகழ்த்துவதாய் அமைந்த இப்பாடல் ஒரூஉ வண்ணத்திற்குச் சிறந்த சான்றாக உள்ளது.

வாய்மொழி இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ‘ தன்னானே தானனே’ போன்ற ஓசைகள் நடப்பியலில் வழக்கத்தில் இருந்தன. செவ்வியல் காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை நூலான பதிற்றுப்பத்தில் ஒழுகு வண்ணங்களும் சொற்சீர் வண்ணங்களும் பயன்படுத்தப்பட்டமையை அறிய முடிகிறது.

**சங்கம் மருவிய காலம்**

சங்கம்மருவி;ய காலத்தில் தோன்றிய அறஇலக்கியங்களில் தொடை அடிப்படையிலான தாஅவண்ணத்தில் அமைந்த பாடல்கள் மிகுதி.

**“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**அன்றே மறப்பது நன்று”**

**குறள் (108)**

இப்பாடலில் இடையிட்டு இரண்டாம் எழுத்தான ‘ன்’ ஒன்றி வருவதால் தாஅவண்ணம் அமைந்துள்ளது எனலாம்.

**“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல்**
**நான்கும் இழுக்கா இயன்ற தறம்”**

**குறள் (35)**

இப்பாடலில் அழுக்காறு,அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய நான்கும் எண்ணுதல் போன்று அமைவதால் எண்ணுதல் வண்ணம் அமைந்துள்ளது எனலாம்.

**இடைக்காலம்**

இடைக்காலத்தில் தோன்றிய காப்பிய இலக்கியங்கள் பெரும்பான்மையாக முடுகு வண்ணத்தில் அமைந்துள்ளன எனலாம்.

**“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்”**

**(சிலம்பு. மங்கலவாழ்த்து)**

**“தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்”**

**(சிலம்பு. வழக்குரை)**

போன்ற அடிகளில் சிறப்பு கருதி வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஏந்தல் வண்ணம் அமைந்துள்ளது எனலாம்.

**பல்லவர் காலம்**

பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களில் தொடை அடிப்படையிலான மற்றும் சீர் அடிப்படையிலான வண்ணங்களே பெரும்பான்மையான பாடல்களில் அமைந்திருந்தன. வண்ண வரலாற்றில் மிக இன்றியமையாத காலம் இந்த கி.பி. ஏழாம் நூற்றாண்டு ஆகும்.

**“வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய்**
**இன்மையுமாய்க்கோனாகி யானெதென்**
**றவரவரைக் கூத்தாட்டு வானாகி**

**நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!"**

**திருவாசகம்**

இப்பாடலில் சீர் அடிப்படையில் வான், மண், வளி, ஒளி, ஊன், உயிர், உண்மை, இன்மை,கோ, யான், அவரவர் என்று எண்ணுதல் வண்ணமாய் அமைந்துள்ளது.

**நாயக்கர் காலம்**

நாயக்கர் காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களில் பெரும்பான்மையாக எழுத்து, சொல், நடை, தொடை, ஓசை ஆகியவற்றின் அடிப்படையிலான அனைத்து வண்ணங்களும் அமைந்துள்ளன எனலாம். எனவே நாயக்கர் காலத்தை வண்ணங்களின் வளர்ச்சிநிலை எனலாம்.

**தற்காலம்**

தற்காலத்தில் தோன்றிய மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ, தனிப்பாடல்கள் மற்றும் ஆல்பம் பாடல்கள் போன்றவற்றிலும் பல வண்ணங்கள் அமைந்துள்ளன. இருப்பினும் உரைநடை இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய நிலையில் வண்ணங்களின் வளர்ச்சி நிலையில் சிறிதளவு தேக்கநிலை ஏற்பட்டுள்ளது.

**"நாம் இயற்கையை அழிப்பது**
**சரி என்றால்**
**இயற்கை நம்மை அழிப்பதும்**
**சரிதான்"**

**ஹைக்கூ**

இக்கவிதையில் இயற்கை, அழிப்பது, சரி ஆகிய சொற்கள் மீண்டும் மீண்டும் வந்து ஏந்தல் வண்ணம் அமையப்பெற்றுள்ளதைக் காணலாம்.

**"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்குநேர்**
**தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்**
**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்குநீர்"**

**பாரதிதாசன் கவிதைகள் (50)**

என்ற பாடலில் தமிழ், தமிழுக்கு, இன்பம், எங்கள், பேர் என்று ஆகிய சொற்கள் மீண்டும் மீண்டும் வந்து ஏந்தல் வண்ணம் அமையப்பெற்றுள்ளதைக் காணலாம்.

**வண்ணம் வருமிடங்கள்**

ஒரு பாடலின் முதல்இ இடைஇ கடையென எல்லா இடங்களிலும் வண்ணம் இடம்பெறும். அவ்விடம் வண்ணத்தால் தனித்து வெளிப்படும். கூற்று உரைப்பவர்க்கும் கேட்பவர்க்கும் இன்பம் தரக்கூடிய இசைஇ நிறம்இ சந்தம்இ ஓசைஇ பண்பு எனப் பலவகையில் செய்யுளை அழகு செய்கிறது.

**வண்ணத்தின் பயன்கள்**

வண்ணத்தால் செய்யுளின் வடிவம் செதுக்கப்படுகிறது;செம்மையுறுகிறது; செய்யுளில் இனிமை பிறக்கின்றது; பாடலை மனம் செய்ய உதவியாய் உள்ளது; சுவைஞர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாய் உள்ளது. ஒலிப்பண்புகளை வரையறுத்துக் காட்டுகிறது. எழுத்தின் வன்மைஇ மென்மைகளை நெறிப்படுத்துகிறது. இயல், இசை, நாடகத்தின் உயிர்நிலையாய் நிற்கிறது. உணர்ச்சிகளைப் பெருக்கிக் காட்டுகிறது. மொழியின் வளத்தையும் புலவரின்ஆற்றலையும் ஒரே நேரத்தில் இணைத்துக் காட்டுகிறது.

**வல்லிசை வண்ணம்**

பொதுவாக நாம் ஒரு கருத்தை வலியுறுத்திக்

கூறும்பொழுதும், ஒருவரைத் திட்டும் பொழுதும், கோபமாக இருக்கும் பொழுதும் வன்மையாய்ப் பேசுவதும், வன்முறைகளில் ஈடுபடுவதும் மனித இயல்பு ஆகும்.

இலக்கியங்களில் குறிப்பாகத் தமிழின் இதிகாசமாகப் போற்றப்பட்டு வரும்; கம்பராமாயணத்தின் யுத்த காண்டத்தில் இடம்பெறும் ஒரு போர்க்களக் காட்சியை வல்லிசை வண்ணத்திற்குச் சான்றாகக் கூறலாம். காவியத்தலைவன் இராமனின் மனைவி சீதையை இலங்கை அரசன் இராவணன் தூக்கிச் சென்றான். அதனால் உண்டான யுத்தத்தால் இராவணனுக்கு இழப்புகள் அதிகம். அப்பொழுது தனது தம்பி கும்பகர்ணனை தனக்காகப் போரிடுமாறு இராவணன் அழைத்தான். ஆறு திங்கள் நன்றாக உணவு உண்பதும், அடுத்த ஆறு திங்கள் நன்றாகத் தூங்குவதுமே அவனுடைய இயல்பு. இதனால் பத்துபேரின் பலம் கொண்டவனாய் இருந்தான். இவன் தூங்கும்பொழுது இவனை எழுப்புவது மிகவும் கடினமான செயல். பல முரசுகளை முழக்கி, சங்கொலி எழுப்பி, ஆராவாரத்துடன் வல்லொலிகளைப் பயன்படுத்தி பேரொலியை எழுப்பச்செய்து, துயில் நீக்குவர். இதனைக் கம்பர் அற்புதமாக விளம்பியுள்ளார்.

கலிங்கத்துப்பரணியில் இடம்பெறும் போர்க்களக் காட்சியும் இதனை ஒத்தே அமைந்திருக்கும்.

**“எடுமெடு மெடுமென எடுத்ததோர்**
**இகலொலி கடலொலி இகக்கவே**
**விடுவிடு விடுபரி கரிக்குழாம் விடும்விடு**
**மெனுமொலி மிகைக்கவே”**

**கலிங்கம். (404)**

யானைப்படைகளும், குதிரைப்படைகளும் போரிடும்பொழுது எழும் ஓசை கடலலையின் ஆரவாரத்தை ஒத்து இருந்தன என்ற கருத்தைக் கூறும் பொருட்டு வல்லினங்கள் திரும்பத் திரும்ப வந்து வல்லிசை வண்ணம் அமையப் பெற்றுள்ளமையை இப்பாடல் வழி அறிய முடிகிறது.

ஆசிரியர் தான் கூற நினைப்பதை வாசகர் மனதில் ஆழமாய்ப் பதியவைக்கும் பொருட்டு வல்லிசை வண்ணத்தைப் பயன்படுத்துவது உண்டு. தற்பொழுது ‘ராப்’ எனப்படும் மூச்சு விடாமல் பாடப்படும் பாடல்களில் வல்லெழுத்துகள் மிகுந்து காணப்படுகின்றன எனலாம்.

“பயப்படலைன்னாலும் பயப்படுறமாதிரி
காட்டிக்கோ இல்லேனா தெரியாதனமா உன்
கழுத்துல என் டூல்ஸ் மாட்டிக்கும்”

அசல் கோளாறு என்ற ராப் பாடலில் வல்லினம் மிகுந்து வல்லிசை வண்ணம் அமையப் பெற்றுள்ளது.

**மெல்லிசை வண்ணம்**

பொதுவாக நாம் ஒரு கருத்தை யாருக்கும் தெரியாமல் இரகசியம் காக்கும்பொழுதும் மென்மைத் தன்மையைச் சுட்டும்பொழுதும்இ மகிழ்ச்சியாய் இருக்கும் பொழுதும் மனிதர் மென்மையாகப் பேசுவது இயல்பு.

இலக்கியங்களில் குறிப்பாகத் தமிழின் இதிகாசமாகப் போற்றப்பட்டு வரும்; கம்பராமாயணத்தின் ஆரண்ய காண்டத்துள்சூர்ப்பணகை வதைப்படலத்தில் இடம்பெறும் ஒரு வருணனைக் காட்சியை மெல்லிசை வண்ணத்திற்குச் சான்றாகக் கூறலாம்.எதிர்மறை நாயகன் இராவணனின் தங்கை சூர்ப்பணகையின் தோற்றத்தைக் குறிக்கும் பொழுது பெண்மைக்கே உரிய

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

மென்மை புலப்படுமாறு மெல்லிசை வண்ணம் அமைத்து ஒரு பெண்ணின் அழகைக் கம்பர் பாடியிருப்பதுஇ இன்றும் மேற்கோளாகப் பல நூல்களில் எடுத்தாளப்பட்டு வருகின்றது.

மென்மையான மனதிற்கு இதம் தரும் காதல், அன்பு, பாசம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்த ஆசிரியர் மெல்லிசை வண்ணத்தைப் பயன்படுத்துவர். தற்காலத்தில் காதல் பாடல்களிலும் சோகப்பாடல்களிலும் மெல்லெழுத்துகள் மிகுந்து காணப்படுகின்றன எனலாம்.

"என்னவென்று சொல்வதம்மா வஞ்சி அவள் பேரழகை
சொல்ல மொழி இல்லையம்மா கொஞ்சி வரும் தேரழகை"

என்ற தற்கால இலக்கியமான 'ராஜகுமாரன்' திரைப்படத்தில் கவிஞர் ஆர்.வி.உதய குமாரின் வரிகள் மெல்லிசை வண்ணம் நிரம்பப் பெற்றதாய் உள்ளது.

## இயைபு வண்ணம்

தற்கால இக்கியமாகக் கருதப்படும்'**நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்'**என்ற திரைப்படத்தின் மூலம் இடைப்பகுதியின் முக்கியத்துவத்தை அனைவரும் அறியலாம். அதுபோல வண்ணங்களில் செய்யுளுக்கு அழகு சேர்ப்பது இயைபு வண்ணம் எனலாம்.

பெரும்பான்மையான திரைப்படங்களில் ஒருவர் பிறந்து, வளர்ந்து, இடையில் விபத்து காரணமாகத் தம் வாழ்நாளில் நடந்தவற்றையெல்லாம் மறந்துவிடுகின்றனர். தான் யார் என்பதையே அறிவதில்லை. இதனால் வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களை நடப்பியலில் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். எனவே இடைப்பகுதி இன்றி எதுவும் முழுமைபெறாது என்பதை நன்கு அறிலாம். இயைபு வண்ணமின்றி செய்யுளும் முழுமைபெறுவது இல்லை.

**சான்று :** 'மக்கள் நாயகன்' விஜய்சேதுபதி நடித்து வெளிவந்த "நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்" என்ற திரைப்படம் இதற்கு நல்ல சான்று. எனவே இடைப்பகுதி இன்றி வாழ்க்கையில் தலையும் புரியாது. காலும் புரியாது. எனவே இடைப்பகுதியின் அவசியத்தை இதன் மூலம் உணரலாம்.

பாட்டுடைத்தலைவரின் பெருமை பாடுமிடத்து இடையெழுத்துகளை ஆசிரியர் பயன்படுத்துவர். குற்nழுத்துகளும் நெட்டெழுத்துகளும் கலந்து பாடும் நுட்பம் சில ஆசிரியர்களுக்கு மட்டுமே கைவந்த கலையாய் உள்ளது.

"ஆசை ஆசையாய் இருக்கிறதே
இதுபோல் வாழ்வதற்கே பாசப் பூமழை பொழிகிறதே"

என்ற தற்கால இலக்கியமான 'ஆனந்தம்' திரைப்படத்தில் கவிஞர் வைரமுத்துவின் வரிகள் இயைபு வண்ணம் நிரம்பப் பெற்றதாய் உள்ளது.

## நெடுஞ்சீர் வண்ணம்

பொதுவாக எதனையும் குறுக்கிச் சொல்வதைக் காட்டிலும் நீட்டி உச்சரிப்பது அழுத்தத்தைக் காட்டுகிறது. தாம் செய்த செயல் எதுவாக இருந்தாலும் அதனைப் பெரிதுபடுத்திக் கூறுவது மனிதர் இயல்பே. சான்றாக, 'சோறு ஆக்கினே;' என்று கூறுவதற்குப் பதிலாக,

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

அரிசியை ஊறவைத்து; அடுப்பைப் பற்ற வைத்து; உலை வைத்து; அரிசியைக் களைந்து; உலையில் போட்டு; உப்பு போட்டு; கஞ்சி வடித்து; சோறு ஆக்கினேன் என்று கூறுவது.

'முதல் மதிப்பெண் பெற்றேன்' என்று கூறுவதற்குப் பதிலாக, நான் கடினப்பட்டு; படித்து; அல்லும் பகலும் தூங்காமல்; அயராது உழைத்து; எழுதிப்பார்த்து; திருத்தி; மீண்டும் எழுதி; கடினமாக உழைத்து முதல் மதிப்பெண் வாங்கினேன் என்று கூறுவது. இவையனைத்தும் ஒருசெயலை நீட்டிக் கூறுவதை ஒத்தன. இதுபோல இலக்கியங்களிலும் நெடுஞ்சீர் அமைத்துப் புலவர்கள் பாடுவதும் உண்டு.

ஒரு வியாபாரி தெருவில் தயிர்…..தயிர்… ..என்று கூறுவதற்குப் பதிலாகஇ தயிரோ தயிர்… . தயிரோ தயிர்…. தயிரோ…..எனக் கூவி விற்பது அனைவரின் செவிகளையும் அடைந்து அவனுக்கு லாபத்தை உருவாக்கும். இங்கும் நெடுஞ்சீர் இடம்பெறுகிறது.

பாட்டுடைத்தலைவரை வியந்து பாராட்டுவது, அழைப்பது போன்ற இடங்களில் ஆசிரியர் நெட்டெழுத்துகளைப் பயன்படுத்துவது உண்டு. தற்காலத்தில் மகிழ்ச்சியான பாடல்களிலும் ஒருவரைக் கிண்டல் செய்யும் பாடல்களிலும் நெட்டெழுத்துகள் மிகுந்து காணப்படுகின்றன எனலாம்.

"மாமாஉன் பொண்ணக் கொடு
அடஆமா சொல்லிக் கொடு
இது சாமி போட்ட முடிச்சு
அது தான்டா மூனு முடிச்சு"

என்ற தற்கால இலக்கியமான 'ராஜாதிராஜா' திரைப்படத்தில் கவிஞர் கங்கை அமரன் வரிகள் நெடுஞ்சீர் வண்ணம் நிரம்பப் பெற்றதாய் உள்ளது.

**குறுஞ்சீர் வண்ணம்**

சொல்ல வேண்டிய சிலவற்றைச் சில இடங்களில் இரகசியமாகவோ அல்லது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இடத்து குறுக்கிச் சொல்வதோ அக்கருத்தின் அழுத்தத்தைக் காட்டுகிறது.

மனிதர்களில் சிலர் சொல்ல வரும் கருத்தை இடம் கருதியோ, நேரம் கருதியோ இரத்தினச் சுருக்கமாய்க் கூறுவதும் உண்டு. அவ்வாறு கூறுவது தான் சொல்ல வரும் கருத்திற்கு அழகு சேர்க்கும். இவ்வாறு புலவர்கள் குறுஞ்சீர்வண்ணம் அமைத்துப் பாடி இலக்கியங்களுக்குச் சுவை சேர்ப்பதும் உண்டு.

பாட்டுடைத்தலைவரைக் கெஞ்சுவது போல் அமைந்த இடங்களில் ஆசிரியர் குற்றெழுத்துகளைப் பயன்படுத்துவது உண்டு. தற்காலத்தில் தத்துவப் பாடல்களில் குற்றெழுத்துகள் மிகுதியாய் உள்ளன.

"ஒருவன் ஒருவன் முதலாளி உலகில் மற்றவன் தொழிலாளி
விதியை நினைப்பவன் ஏமாளி அதை வென்று முடிப்பவன் அறிவாளி"
பூமியை வெல்ல ஆயுதம் எதற்கு பூ பறிக்க கோடரி எதற்கு"

என்ற தற்கால இலக்கியமான 'முத்து' திரைப்படத்தில் கவிஞர் வைரமுத்து வரிகள் குறுஞ்சீர் வண்ணம் நிரம்பப் பெற்றதாய் உள்ளது.

**சித்திர வண்ணம்**

குற்றெழுத்துகளும்,நெட்டெழுத்துகளும் சமமாய் இடம்பெறும் பாடலை சித்திர வண்ணம் பெற்ற

பாடல் என்கிறோம். இலக்கியங்களில் புலவர்கள் சித்திரவண்ணம் அமைத்துப் பாடுவது பிற நூல்களுக்கு மத்தியில் வண்ணமயமாய்த்; திகழ்கிறது. சில வரைபடங்கள் கரிக்கோலை வைத்து வரைந்தாலே அழகு பெற்றுவிடும். சில அதற்கு வண்ணம் தீட்டினால் மேலும் அமகுபெறும். அதுபோல இங்கு குறில், நெடில் சேர்க்கையினால் ஓர் இலக்கியம் அழகுபெற்றுத் திகழ்கிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பிள்ளைத் தமிழின் முத்தப்பருவத்தில் குழந்தை இராம சந்திரனின் பெருமைகளைக் கூறித் தாலாட்டுமாறு அமைந்த,

**“சொல்லிப் பார்த்தால் வாய்மணக்கும்**
**தொட்டுப் பார்த்தால் கைமணக்கும்**
**“தூய நெஞ்சால் உனைநினைத்தால்”**

**புரட்.எம்.ஜி.ஆர்.பி.த. (47)**

என்ற பாடலில் குறிலும் நெடிலும் கலந்து வந்து தமிழக மக்களால் போற்றப்பட்டு வரும் குழந்தை எம்.ஜி.ஆரின் மாண்புகள் குறித்துக் கூறும்பொருட்டுக் கவிஞர் முத்துலிங்கம் சித்திரவண்ணம் அமைத்துப் பாடியிருப்பது ரசிக்கத்தக்கதாய் உள்ளது.

**இது “திருப்புகழைப் பாடப் பாடவாய் மணக்கும்.....”**

என்ற வரிகள் கவிஞர் பூவை செங்குட்டுவனின் பக்திப் பாடலை ஒத்தும்,

நடிகர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படமான ‘நாடோடி மன்னன்’ திரைப்படத்திலிருந்து,

**“தொட்டால் பூ மலரும்; தொடாமல் நான் மலர்வேன்....”**

என்ற கவிஞர் வாலியின் மெட்டுவரிகளையும் ஒத்துள்ளது.

**“என்ன விலை அழகே உன்னை விலைக்கு வாங்க வருவேன்**
**வி லை உயிர் என்றாலும் தருவேன்**
**உன் அழகைக் கண்டு வியந்து போகிறேன்”**

என்ற தற்கால இலக்கியமான ‘ரோஜா’ திரைப்படத்தில் கவிஞர் வாலியின் வரிகள் சித்திர வண்ணம் நிரம்பப் பெற்றதாய் உள்ளது.

**நலிபு வண்ணம்**

தமிழின் எழுத்து வகைகளுள் ஒன்றான சார்பெழுத்துகளுள் ஒன்று ஆய்தம். இவ்வெழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கின்றது. ஒரு திருமண வீட்டில் அனைவரும் கலகலப்பாய் இருக்கும்பொழுது ஒருவர் மட்டு;ம் தனித்து அமைதியாய்த் தெரிவர். இவ்வாறு மனிதரில் சிலர் தனித்துத் தெரிவது போன்று வண்ணங்களில் ஆய்தமும் புலவர்களால் தனித்துக் கையாளப்படுகிறது.

**‘பேசும் உலாவிற் பெதுமை புலி’**
**‘பிள்ளைக்கவிக்கு அம்புலி புலி’ போல்**
**இனிய வண்ணத்திற்கு நலிபு புலி’**

தற்காலத் திரைப்படங்களில் அரிதாக குட்பை நண்பா, சண்டக்கோழி போன்ற திரைப்படங்களில் ஆய்தம் அமைத்துக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

**எண்ணு வண்ணம்**

‘எண்ணு’ என்றால் எண்ணிக்கையைக் குறிப்பதாகும். பொதுவாக எழுவாய் அல்லது கருத்தா என்றழைக்கப்படும் பெயர்ச்சொற்கள் தொடர்ந்து வரும்பொழுது எண்ணுவது போன்ற அமைப்பு இருக்கும். இதுவே எண்ணு வண்ணம்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

என்று அழைக்கப்படுகிறது. இவ்வண்ணத்தைச் செய்யுளில் அமைத்துப் பாடுவது புலவர்களின் திறத்தையும், இலக்கியச் சுவையையும் மிகுவிக்கிறது.

குலோத்துங்கன் பிள்ளைத்தமிழின் அம்புலிப்பருவத்தில் அமைந்துள்ள,

**"வீரியன் அனுபமன் வானவன் மீனவன்**
**வினியதன் வில்வி னோதன்**
**வீரகண் டிPரவன் வீரநா ராயணன்**
**விமலன் ரா சாதி ராசன்**
**சூரியன் வியாகரன் துங்கஅம லன் வரன்**
**துரகவித் தியாவி னோதன்**
**சோழவம் சாதிபன் சாலஏ கோபமன்**
**உத்துங்கன், உத்துங்க துங்கன்"**

**குலோத்.பி.த. (78)**

என்ற பாடலில் இரண்டாம் குலோத்துங்கனின் வேறுபெயர்கள் அனைத்தையும் கூறி அம்புலியைக் குழந்தை குலோத்துங்க மன்னருடன் விளையாட அழைக்கும் பொருட்டு ஆசிரியர் ஒட்டக்கூத்தர் ஒரு பாடல் முழுவதும் பொருட்பெயர் எண்ணு வண்ணம் அமைத்துப் பாடியிருப்பது பாராட்டத்தக்கது.

இது புருஷலட்சணம் என்ற திரைப்படத்தில் ' ஒரு தாலி வரம் கேட்டு வந்தேன்' என்ற பாடலின் தொடக்கத்தில்,

**"கோல விழியம்மா ராஜகாளியம்மா**
**பாளையத்தாயம்மா பங்காருமாயம்**
**முத்துமாரியம்மா பத்ரகாளியம்மா**
**முண்டகண்ணியம்மா எங்கசென்னியம்மா**
**குங்குமகோதையே அன்னையசோதையே**
**செந்தூரதெய்வானை சிங்காரபூபதி**
**அன்னைவிசாலாட்சி**
**சௌடாம்பாவிருப்பாட்சி**
**சுந்தரநீலியே சௌந்தரமாளியே**
**வள்ளியம்மா எங்கள்அல்லியம்மா**
**தங்கசெல்லியம்மா செல்லகொள்ளியம்மா**
**அடிஅங்காளம்மா எங்கள்செங்காலம்மா**
**அருள்முப்பாத்தம்மா அனல்வெப்பாத்தம்மா**
**சிங்காரி ஒய்யாரி உமையம்மா**
**மண்மாரி பொன்மாரி**
**செல்லாயி சிலம்பாயி**
**மருவத்தூர் அம்மாவே வா……"**

அடிகளைப்போல் தொடர்ந்து பாடல் முழுவதும் பெயர்களாக அமைத்துக் கவிஞர் தேவா பாடலாக அமைத்துள்ளார்.

**ஏந்தல் வண்ணம்**

ஏதேனும் ஒரு சொல், இரட்டைக்கிளவி, மற்றும் அடுக்குத்தொடர் ஆகியன ஒரு பாடலில் மீண்டும் மீண்டும் ஏந்தப்பட்டு வருவது எந்தல் வண்ணம் எனப்படும்.'ஏந்தல்'என்றால் மிகுதல் என்று பொருள். இலக்கண நூலார் இதனைச் சொல் பின்வருநிலையணி, பொருட் பின்வரு நிலையணி, சொற்பொருட் பின்வரு நிலையணி என்று அழைப்பர். இவ்வண்ணம் எல்லாப் பாடல்களிலும் இடம்பெறுகிறது என்று அறுதியட்டுக் கூறலாம்.

இன்றைய திரைப்படங்களில் ஓசை முழுமைபெறும்பொருட்டு ,

**"சின்ன சின்ன ஆசை சிறகடிக்க ஆசை**
**முத்து முத்து ஆசை முடிந்து வைத்த ஆசை"…**

என்ற அடிகளில் கவிஞர் வைரமுத்து'ஆசை' என்ற சொல்லைத் திரும்ப திரும்பப் பயன்படுத்தி ஏந்தல் வண்ணம் அமையப் பாடியுள்ளார்.

**ஒழுகு வண்ணம்**

ஓசை வண்ணங்களுள் முதன்மை இடத்தைப் பெறுவது ஒழுகு வண்ணம் ஆகும். ஒழுகு என்றால்

பழகு என்று பொருள். ஒத்துப் பழகு. அதாவது ஒத்த ஓசை என்றும் பொருள் கொள்ளலாம். ஒருவரின் இன்ப உணர்வைக் குறிப்பதே ஒழுகு வண்ணம் ஆகும். மகிழ்ச்சியாய் இருக்கும்பொழுது மயிலானது தோகையை விரித்து ஆடிக்கொண்டே அகவுவது போல குழந்தையைக் கண்ட தாயின் மனம் மகிழ்தல் போன்ற இடங்களில் ஒழுகு வண்ணம் அமைக்கப்படுகிறது.

**'சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழில்' செங்கீரைப்பருவத்தில் அமைந்துள்ள,**

**"பந்து கழங்கணி நங்காய் செங்கோ செங்கீரை....**
**சந்தத முந்தொழ வந்தாய் செங்கோ செங்கீரை**
**சங்கணி யுமபுயல் தங்காய்இ செங்கோ செங்கீரை**
**இந்தொளிர் எந்தையொர் பங்காய் செங்கோ செங்கீரை**
**என்றனை யும்பணி கொண்டாய் செங்கோ செங்கீரை"**

**சொர்ண.அம்பி.பி.த. (19)**

என்ற பாடல்களில் முழுவதும் செங்கோ செங்கீரை என்ற தொடரினையும் 'ஆய்' என்ற ஒரே ஒலி கொண்ட விகுதிகளையும் அமைத்து ஆசிரியர் ஒழுகுவண்ணம் அமையப் பாடியுள்ளார்.

இப்பாடல் தற்கால இலக்கியமான எங்கேயும் காதல் என்ற திரைப்படத்தில் கவிஞர் வாலி எழுதிய,

"நங்காய் நிலாவில் தங்காய்............."☺

என்ற பாடலை ஒத்து ஒழுகு வண்ணம் கொண்டு அருமையாய் அமைக்கப்பட்டுள்ளது.

அகவல் போல ஒழுகிய ஓசை உடைய வண்ணம் ஒழுகு வண்ணம் எனப்படும். இவ்வண்ணமின்றி திரைப்படப்பாடல் இராது' என்று கூறினாலும் அஃது மிகையாகாது.

**யாயும் யாயும் யாராகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**செம்புலப் பெயல்நீர்போல்**
**அன்புடை நெஞ்சம் மதாம் கலந்தனவே"**

என்ற 'சகா'திரைப்படத்தில் கவிஞர் வைரமுத்து ஒழுகு வண்ணம் அமையப் பாடல் பாடியுள்ளார்.

### ஒரூஉ வண்ணம்

ஓசை வண்ணங்களுள் அடுத்ததாக முக்கியத்துவம் பெறுவது ஒரூஉ வண்ணம் ஆகும். ஒரூஉ என்றால் தொடர்பின்றி எனப் பொருள்படும். அதாவது பாடல் தொடர்பு இல்லாமல் அற்று அற்று வருவது'ஒரூஉ' எனப்படும். ஒரூஉ என்பதற்கு ஓரம் என்றும் பொருள் கொள்ளலாம்.

மகிழ்ச்சியான சூழ்நிலை, விழாக்கள், மழலையைக் காணும்பொழுது ஏற்படும் துள்ளல் இசையால் வரும் களிப்புணர்வே அகைப்பு வண்ணத்திற்கான காரணங்கள் ஆகும்.

### அகைப்பு வண்ணம்

ஓசை வண்ணங்களில் மூன்றாவதாக இடம்பெறுவது அகைப்பு வண்ணம் ஆகும்.மனிதன் வாழ்க்கையில் இன்பமாய் இருக்கும் சூழ்நிலையில் மிகுந்த மகிழ்ச்சியுடனும் செயல்பாடுகளில் ஒரு துள்ளலும் இருக்கும் சமயத்தில் பாடப்படும் பாடல்களில் அகைப்பு வண்ணம் அமைந்திருக்கும். எனவே துள்ளல் ஓசை அமைந்த பாடல்களில் கண்டிப்பாக அகைப்பு வண்ணம் அமைந்திருக்கும்.

மகிழ்ச்சியான சூழ்நிலை, விழாக்கள், மழலையைக் காணும்பொழுது ஏற்படும் துள்ளல் இசையால் வரும் களிப்புணர்வே அகைப்பு வண்ணத்திற்கான காரணங்கள் ஆகும்.

**தூங்கல் வண்ணம்**

பொதுவாகத் தூங்கல் வண்ணம் விருத்தப்பாவில் அமைந்துள்ள காப்பியங்களில் அமைந்திருக்கும். இது வஞ்சிப்பாவிற்கு உரிய வஞ்சியுரிச்சீர் ஆகும். பிள்ளைத்தமிழ் நூல்களில் தாலப்பருவம் தூங்கல் ஓசையில் அமைந்துள்ளது. பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கே உரிய நீராடற்பருவத்திலும் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கே உரிய சிற்றில் பருவத்திலும் ஆங்காங்கே தூங்கல் வண்ணம் அமைக்கப்படுகிறது.

மெல்லிய இசைத்தன்மை கொண்டு ஒருவரைத் தூங்க வைக்கும் இயல்புடையது தூங்கல் வண்ணம்.

**உருட்டு வண்ணம்**

ஓசை வண்ணங்களுள் நான்காவதாக இடம்பெறுவது உருட்டு வண்ணம் ஆகும். உருட்டு என்பதற்கு நான்கு சீர்களால் வந்து அராகம் தொடுத்து வருவது எனப் பொருள்படும். நெகிழாது உருண்ட ஓசை உடையதலின் இஃது உருட்டு வண்ணம் எனப்பட்டது.

ஆண்பாற் மற்றும் பெண்பாற் பிள்ளைத்தமிழ்களைப் பாடும்பொழுது அவ்வவ்வற்றிற்கு உரிய சிறப்பான பருவங்களைப் பாட இவ்வண்ணத்தைப் பயன்படுத்தியுள்ளனர். தற்காலத்தில் நடக்காதவை மற்றும் மிகுதியாகப் பேசுதல் என்ற பொருளில் உருட்டு என்ற சொல் வழங்கப்பட்டு வருகிறது.

> **“காற்று வந்து உன் குழல் கலைத்தால் கைது செய்வதென ஏற்பாடு**
> **பெண் நெஞ்சை அன்பால் வென்றாய்”**

என்ற ‘துள்ளாத மனமும் துள்ளும்’திரைப்படத்தில் கவிஞர் வைரமுத்து உருட்டு வண்ணம் அமையப் பாடல் பாடியுள்ளார்.

> **“ஒரு பொண்ணு ஒன்னு நான் பார்த்தேன்**
> **சென்ட்டி மீட்டர் சிரிக்க சொல்லி கேடடேன்**
> **அவ சிரிச்ச சிரிப்புல நூறுபேரு செத்துப் போயிட்டா”**

என்ற ‘கு’திரைப்படத்தில் கவிஞர் வைரமுத்து உருட்டுவண்ணம் அமைய பாடல் பாடியுள்ளார்.

**முடுகு வண்ணம்**

ஓசை வண்ணங்களுள் ஐந்தாவதாக இடம்பெறுவது முடுகு வண்ணம் ஆகும். முடுகு என்பதற்கு நான்கு சீர்களின் மிக்கு வந்து அராகம் தொடுத்து வருவது எனப் பொருள்.

இறைவனை வாழ்த்தும் பொருட்டு ஆன்மீக நாட்டம் காரணமாக அடியிறந்து பாடுவது இயல்பு. அச்சமயத்தில் முடுகு வண்ணம் அமைந்து செய்யுளின் அழகை மிகுதியாக்குகிறது.

**தாஅ வண்ணம்**

இரண்டாம் எழுத்து ஒத்து வருவது எதுகைநயம் எனப்படும். ‘தாஅ’ என்றால் தாவுவது என்று பொருள்படும். சீர் இடையிட்டுத் தாவி வரும் எதுகைநயம் தாஅ வண்ணம் என்றழைக்கப்படுகிறது. முதல் சீரின் இரண்டாவது எழுத்தோ அல்லது மூன்றாம் சீரின் இரண்டாவது எழுத்தோ, மூன்றாம் சீரின் இரண்டாவது எழுத்தோ அல்லது ஐந்தாம் சீரின் இரண்டாவது எழுத்தோ, ஐந்தாம் சீரின் இரண்டாவது எழுத்தோ அல்லது ஏழாம் சீரின் இரண்டாவது எழுத்தோ இடையில் விட்டு விட்டுத் தவளை தாவுவது போல அமைந்து வருவது தாஅ வண்ணம் ஆகும். ஒரு பாடல் முழுவதும் இதேபோல் சீர் இடை விட்டு எதுகைநயம் பெற்று வரின் அவ்விலக்கியம்

முழுவதும் தாஅ வண்ணம் மிகுந்ததாய் அமைகிறது.

செய்யுளை இனிமையாக்கும் பொருட்டும், அவ்வினிமையை மிகுதியாக்கும் பொருட்டும் தாஅவண்ணம் அமைக்கப்படுகிறது. இது பாடலின் ஒரே அடியில் உள்ள சீர்களுக்குள் அமைக்கப்படுகிறது. அதனால் பாடலை எளிதில் மனனம் செய்ய முடிகிறது. பிற செய்யுள்களுக்கு மத்தியில் ஒரு செய்யுள் தனித்துக் காணப்படுவதில் இந்த தாஅவண்ணமே முக்கியக் காரணியாய்த் திகழ்கிறது.

**“வெண்ணிலவே வெண்ணிலவே**

**விண்ணைத்தாண்டி வருவாயா?**

**விளையாட ஜோடி தேவை….ஏய்…. (2)**

**இந்த பூலோகத்தில் யாரும்**

**பார்க்கும் முன்னே**

**உன்னை அதிகாலை அனுப்பி வைப்போம்…**

என்ற வரிகள் இளம் கவிஞர் வைரமுத்து‘மின்சார கனவு’நடிகரும் நடனக் கலைஞருமான பிரபுதேவா நடித்த திரைப்படத்தில் தாஅவண்ணத்தில் பாடல்அமைத்தமை இங்கு ஒப்பிடத்தக்கது.

**அளபெடை வண்ணம்**

தற்காலப் பிள்ளைத்தமிழ் நூல்களுள் தமிழ்க்கடல் ராய.சொக்கலிங்கன் காந்தி பிள்ளைத்தமிழ் சிறப்பித்துப் பேசப்படுவதற்கான காரணங்களுள் ஒன்றாக அம்புலிப்பருவம் முழுவதும் அளபெடை வண்ணத்தில் அமைந்திருப்பதைக் கூறலாம்.

**“காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே!**

**அன்பதனால் உலகுஆளும் ஐயன்இஉயர்**

**காந்தியினோடு அம்புலீஇ ஆடவாவே!”**

**காந்தி பி.த. (61)**

மேலும் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நன்கு அமைய அளபெடை வண்ணமும் ஒரு காரணமாய் அமைகிறது.

**“யாரடி நீ மோகினி! கூறடி என் கண்மணி!**

**ஆசையுள்ள ராணி! அஞ்சிடாதே நீயும்**

**ஆசையோடு வா காமினி”**

என்ற வரிகள்கவியரசர் கண்ணதாசன் ‘உத்தமபுத்திரன்’திரைப்படத்தில் அளபெடை வண்ணத்தில் பாடல் அமைத்தமை இங்கு ஒப்பிடத்தக்கது.

**அகப்பாட்டு வண்ணம்**

அகம் என்றால் உள்ளம் என்று பொருள். பாடலின் உள்ளேயே அதாவது பாட்டின் அடிகளுக்குள்ளே நிகழும் நிகழ்வே – அமைப்பே அகப்பாட்டு வண்ணமாய் உருவெடுக்கிறது. இங்கு பாடலின் இறுதியடி இடையடிபோல நிற்கும். எனவே பாடலின் சுவையை மிகுவிக்கும் பொருட்டு அகப்பாட்டு வண்ணம் அமைக்கப்படுகிறது.

அகப்பாட்டு வண்ணம் என்பது பாட்டின் முடிபினை விளக்க வரும் ஈற்றசை ஏகாரத்தால் முடியாது இடையடிகள் போன்று முடியாத தன்மையினால் முடிந்து நிற்பதாகும். அதாவது பாடல் முடியாததுபோல இன்னும் தொடர்வதுபோல ஓர் எண்ணம் தோன்றும். இருப்பினும் அந்த இறுதியடியையே முத்தாய்ப்பான முடிவாக ஆசிரியர் வைத்துவிடுவது உண்டு. இறுதியடியை அப்பாடலின் முதலடியுடனோஇ பிற அடிகளுடனோ இணைத்துப் பொருள் கொள்ள வேண்டும். இதுவே அகப்பாட்டு வண்ணச் சுவையின் இரகசியம் ஆகும்.

**புறப்பாட்டு வண்ணம்**

புறம் என்றால் வெளியே என்று பொருள். பாடலின் உள்ளேயே அதாவது பாட்டின் அடிகளுக்குள்ளே நிகழும் நிகழ்வு வெளிப்படையாய் தெரியும் வண்ணம் அமைவது புறப்பாட்டு வண்ணமாய் உருவெடுக்கிறது. இங்கு பாடல் முடிந்ததுபோல தோற்றம் தரும். ஆனால் முடியாத உண்மை புலப்படும். இவ்வாறு பாடலின் சுவையை மிகுவிக்கும் பொருட்டு புறப்பாட்டு வண்ணம் அமைக்கப்படுகிறது. அதாவது பாடல் முடிந்ததததுபோல தோன்றினாலும் முடியாத உண்மை புலப்படுவதை நம்மால் உணர முடியும். இறுதியடியை அப்பாடலின் பிற அடிகளுக்குள் இணைத்துப் பொருள் கொள்ள வேண்டும். இதுவே புறப்பாட்டு வண்ணச் சுவையின் இரகசியம் ஆகும்.

**ஆய்வு முடிவுகள்**

- வண்ணம் செய்யுளின் ஒவ்வொரு பகுதியிலும் அமைந்து செய்யுள் முழுவதும் நிறைந்து காணப்படுகிறது.
- சங்ககாலந்தொட்டே வண்ணங்களின் வளர்ச்சியைக் கண்கூடாகக் காணலாம். சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகைஇ பத்துப்பாட்டு நூல்களில் வண்ணங்களின் ஆட்சி மிகுதி.
- செய்யுளின் உறுப்புகளை அழகுறச் செய்வதில் வண்ணத்தின் பங்கு இன்றியமையாதது.
- சங்கம் மருவிய கால நூலான உலகப் பொதுமறையென போற்றப்பட்டு வரும் திருக்குறள் வண்ணங்களின் வடிவமாயத் திகழ்கின்றது எனலாம்.
- இடைக்காலத்தில் பக்தியை முன்னிட்டு வண்ணங்கள் இலக்கியங்களில் முக்கியப்பங்கு வகித்தன.
- தற்காலத்தில் பாரதியார், பாரதிதாசன் போன்ற தற்காலக் கவிகளின் பாடல்கள் வண்ணத்திற்கு முன்மாதிரியாய் அமைந்துள்ளன. தமிழ்நாட்டு மாணாக்கர்க்குப் பாநயம் பாராட்டல் என்பதைப் பாடமாக வைக்கும் அளவிற்கு வண்ணம் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.
- வண்ணத்தின் முக்கிய நோக்கமே செய்யுளை அழகுறச் செய்தலாகும்.
- ஒரு செய்தியை வலியுறுத்திச் சொல்லும் பொருட்டுப் புலவர்கள் வல்லிசை வண்ணத்தைக் கையாண்டுள்ளனர் என்பது அறியப்படுகிறது.
- ஒரு செய்தியைச் சொல்லியும் சொல்லாமலும் மென்மையாய்ச் சொல்லும் பொருட்டுப் புலவர்கள் மெல்லிசை வண்ணத்தைக் கையாண்டுள்ளனர் என்பது அறியப்படுகிறது.
- ஒரு செய்தியை இடமறிந்து, காலமறிந்து, உலகவழக்கிற்கு ஏற்றாற்போல் கூறுவதற்குப் புலவர்கள் இயைபு வண்ணத்தைக் கையாண்டுள்ளனர் என்பது அறியப்படுகிறது
- ஒன்றை மிகைப்படுத்திக் கூறுவதற்குப் புலவர்கள் நெடுஞ்சீர் வண்ணத்தைக் கையாண்டுள்ளனர் என்பது அறியப்படுகிறது.
- ஒன்றைச் ‘சொல்லின் செல்வன்’ அனுமனைப் போல் இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதற்குப் புலவர்கள் குறுஞ்சீர் வண்ணத்தைக் கையாண்டுள்ளனர் என்பது அறியப்படுகிறது.

- ஒன்றை எல்லாம் கலந்த வண்ணக் கலவையாகத் தருவதற்குப் புலவர்கள் சித்திர வண்ணத்தைக் கையாண்டுள்ளனர் என்பது அறியப்படுகிறது.
- ஒரு கருத்தைக் 'குன்றிலிட்ட விளக்காய்' அனைவரும் அறியும்படிச் செய்வதற்குப் புலவர்கள் நலிபு வண்ணத்தைக் கையாண்டுள்ளனர் என்பது அறியப்படுகிறது.
- வண்ணங்களின் வகைகளில் எழுத்து அடிப்படையிலான வண்ணங்கள் இலக்கியங்களில் சிறப்பிடம் பெறுகின்றன என்பது இவ்வாய்வின் வழி அறியப்படுகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. கண்ணப்ப முதலியார், தமிழ் இலக்கிய அகராதி, சென்ட்ரல் புக் டிப்போ, சென்னைஇ மு.ப. (2019)
3. கவிச்சக்கரவர்த்தி கம்பர், கம்பராமாயணம், ஆரண்ய காண்டம், சூர்பணகை வதைப் படலம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பதிப்புத்துறை, சென்னை, மு.ப. (1957)
4. திருவள்ளுவர், திருக்குறள், அறத்துப்பால், வெஃகாமை அதிகாரம்இ,வர்த்தமானன் பதிப்பகம்இ,சென்னை.
5. தி.வே.கோபாலையர், தமிழ் இலக்கணப் பேரகராதி, தமிழ்மண் பதிப்பகம், சென்னை. மு.ப. (2005)
6. தொல்காப்பியர், தொல்காப்பியம் செய்யுளியல், வெள்ளைவாரணன் உரை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம். மு.ப. (1989)
7. ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை, அகநானூறு மூலமும் உரையும்,கௌரா பதிப்பகம்,சென்னை.
8. நக்கீரர், திருமுருகாற்றுப்படை, சைவசித்தாந்த மகாசமாஜம் தியாகராஜ நகர் சென்னை,மு.ப. (1946)
9. நச்சினார்க்கினியர் உரை,பட்டினப்பாலை,உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
10. முனைவர் வீ.ப.கா.சுந்தரம், தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113. மு.ப. (1994)
11. ராச.மாணிக்கனார், தமிழ்மொழி மற்றும் இலக்கிய வரலாறு, அதியமான் வெளியீட்டகம்தருமபுரி– 636703இ மு.ப. (2003)
12. அடியார்க்கு நல்லார் உரை, சிலப்பதிகாரம்இகழக வெளியீடு.
13. வர்த்தமானன், தமிழ் - தமிழ் அகராதி, மணிமேகலைப்பிரசுரம் சென்னை,மு.ப. (2008)